**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 'A' தர அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மே 2018 இல் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலக ஒன்றியத்தால் (GANHRI) 'A' அந்தஸ்து பெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழு என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என்ற விடயத்தை நாட்டின் சக பிரஜைகளிடத்தே மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றது. 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் மீளவும் 'A' அந்தஸ்திற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட விண்ணப்பக்கோரிக்கைகள் வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்படத்தக்கது.

GANHRI ஆனது உலகலாவிய தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் ஒன்றுகூடும் மன்றமாகும். பாரிஸ் நியமங்களின் படி (1993) தேசிய மனித உரிமைகள் நிறுவனமொன்று மன்றத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெறுவதற்கோ அல்லது தக்கவைத்துக்கொள்வதற்கோ தகுதியுடையதா என்பதை பரிசீலிப்பது GANHRI இன் முக்கிய பணிகளில் ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் பொது சபையினால் பாரிஸ் நியமங்கள் (1993), தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உண்மைத்தன்மையையும், செயற்திறனையும் பரிசீலிக்கும் சர்வதேச தர நிலைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய ஆணைக்குழுவொன்றின் அரசியலற்ற சுயாதீனத்தன்மை சட்டத்திலும் நடைமுறையிலும் உறுதிப்படுத்தப்படுவதானது பாரிஸ் நியமங்களின் கீழ் ஒரு முக்கிய தகுதியாக மற்றும் தேவைப்பாடாக அமைகின்றது. உறுப்பினர் தேர்வு மற்றும் நியமனங்களின் போது பின்பற்றப்படும் செயன்முறை, உறுப்பினர்கள் பதவி நீக்கப்படுவதற்கான காரியக்கிரமங்கள் மட்டுமல்லாது, அரசியல் அற்ற சுயாதீன தன்மையை நிறுவனம் நடைமுறைப்படுத்துகின்றதா என்பன உற்று நோக்கப்படுகின்றன. மேலும் ஒரு தேசிய ஆணைக்குழுவானது சமூகத்தின் பல்வகைமையை பிரதிபலித்தல், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளை உள்வாங்கக்கூடிய பரந்த ஆணையை கொண்டிருத்தல், விசாரணைகளை மேற்கொள்ள போதுமான அளவு அதிகாரங்களை கொண்டிருத்தல், மற்றும் தேவையான வளங்களை கொண்டிருத்தல் அவசியமாகின்றது.

2018 ஜனவரி மாதத்தில் 120 தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்ட போதிலும் 77 நிறுவனங்களுக்கே 'A' தர அந்தஸ்து வழங்கப்பட்டது. இலங்கையுடன் இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளே தெற்காசியாவில் 'A' அந்தஸ்து பெற்ற தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களைக் கொண்டதாக விளங்குகின்றன. அது மட்டுமல்லாது ஆசிய பசுபிக் பிராந்தியத்திலேயே 15 நாடுகள் மாத்திரமே 'A' அந்தஸ்தினைப் பெற்ற தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களை உள்ளடக்கியவையாக காணப்படுகின்றன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு புதிய ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டு 2½ வருடங்களுக்குள் 'A' அந்தஸ்துக்கு மேம்பட்டுள்ளமையானது நிறுவனத்தின் வெற்றியையும் தாண்டி அரசியலமைப்பின் 19 வது சீர்திருத்தத்தின் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படுவதற்கு வழிவகுத்த இலங்கை மக்களின் வெற்றியாகும். இந்த வெற்றி ஆணைக்குழுவானது இலங்கையர் அனைவரினதும் உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேலும் கடினமாக பணியாற்றுவதற்கும் ஊக்கமளிக்கின்றது.

ஆணைக்குழுவிற்கு உறுதுணையாக இருந்தோருக்கும், ஊக்கமளித்தோரிற்கும், குறிப்பாக அரசியலமைப்பு பேரவையின் தவிசாளரால் வழங்கப்பட்ட ஈடிணையற்ற ஆதரவிற்கும், ஆணைக்குழு நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

Udagama

Dr. N. D. Udagama
Chairperson
Human Rights Commission of Sri Lanka

கலாநிதி. டீ. உடகம
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

30-05-2018